## கொக்குப்படையான் முகாம்
## 19 ஆம்திகதி இரவு புலிகளிடம் வீழ்ந்தது

சிலாவத்துறை இராணுவ முகாமிற்கு அண்மையிலிருந்த கொக்குப்படையான் இராணுவ முகாமும் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை) சிலாவத்துறை பாடசாலை முகாமும் 19 ஆம் திகதி இரவு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. ஸ்ரீலங்கா அரசு தனது முழுமையான பலத்தையும் பயன்படுத்தி இப்போரை நடாத்தியது. இத்தாக்குதலில் 40 க்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 100 க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் 25 போராளிகள் வீரமரணமடைந்தனர். ...04 ஆம் பக்கம் பார்க்க

## ★ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை
## மும்முனைத் தாக்குதல் மத்தியில் நடைபெற்ற நான்கு நாள் சிலாவத்துறை மோதல்

தமிழீழ வரலாற்றில் என்றுமே நடந்திராத வாறு மிகப் பெரிய போராட்டம் ஒன்று 19. 3. 91 இலிருந்து 22. 3. 91 வரை தொடர்ந்து நான்கு நாட்கள் சிலாவத்துறை முகாம் மீது எம்மால் மேற்கொள்ளப்பட்டது. 10 மைல்களுக்கு மேல் சுற்றளவுள்ள பரந்த பிரதேசத்தில் இப் போராட்டம் நடைபெற்றது என சிலாவத்துறைச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கே தள்ளாடி, வங்காலையிலிருந்து சிலாவத்துறை நோக்கி வெளியேற முயன்ற சிறிலங்காப் படையினரை எதிர்த்து ஒரு புறமும் தெற்கே கொண்டச்சியிலிருந்து சிலாவத்துறை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்காப்படையினரை எதிர்த்து மறுபுறமும் மேற்கே கடலிலிருந்து இரண்டு பெரிய கப்பல்கள், 12 பீரங்கிப்படகுகள் என்பன தாக்குதலை நடாத்த சிறிலங்காப்படையினர் கரையிறங்கி சிலாவத்துறை நோக்கி முன்னேற முயன்றதை எதிர்த்து இன்னொரு புறமும் வானிலிருந்து நான்கு அவ்ரோ, இரண்டு வை - 12' நான்கு சியா - மாசெட்டி விமானங்கள் என்பன 24 மணிநேரமும் தொடர்ந்து குண்டு மாரி பொழிய ஆறு ஹெலிகப்டர்கள் தாக்குதலை தொடர்ந்தவண்ணம் சிலாவத்துறை முகாம் படையினருக்கு உதவி வழங்கும் முயற்சியை எதிர்த்து பிறிதொரு புறமும் ஆக வடக்கு, தெற்கு, மேற்கு (கடல்பகுதி) வான் ஆகிய — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 121 பிரமோதூத பங்குனி 14 ( 28-03-1991 ) வியாழன்

### மன்னார் - வவுனியா வீதியில் தாக்குதல்

மன்னார்- வவுனியா வீதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விமானப்படையினரின் கடுமையான தாக்குதல் முருங்கன் பகுதியில் நடைபெறுவதாகவும் சுமார் 10,000 துருப்பினர் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
— 04 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளுக்கு எதிரான போரில் இராணுவத்துடன் தமிழ்க்குழு

## ஆயிரம் பேர் பயிற்சி பெற்றுள்ளனராம்

மன்னார், வவுனியாப் பகுதிகளில் எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு வவுனியாவில் இயங்கும் தமிழ்க்குழுவொன்றை அரசு பயன்படுத்தவுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தகவலை வெளியிட்ட கொழும்புப் பத்திரிகை ஒன்று, ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக இத் தமிழ்க் குழுவின் ஆயிரம் உறுப்பினர்கள் படையினரிடம் பயிற்சி பெற்ற பின்னர் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடவடிக்கையை ஆரம்பிக்கும் உத்தரவை இன்னமும் பாதுகாப்பு அமைச்சு விடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

வன்னிப் பிராந்தியம் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதப்படுவதால் இப் பகுதியை நன்கு அறிந்த பலர் இக் குழுவில் இடம் பெற்றுள்ளதாக இரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாகவும் இப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்க் குழுவும், தீவுப்
—04 ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர் செல்லச்சாமி கூறுகிறார்

## தமிழ்பகுதி தவிர்ந்த இடத்தில் இரசாயன ஆலை ஆரம்பிக்குக

வடக்கு கிழக்கைத் தவிர்ந்த வேறு எப்பகுதியிலாவது ஓர் கொழும்பில் நடைபெற்ற பரந்தன் இரசாயன ஆலை

## சிலாவத்துறையில் வீரமரணமடைந்த வேங்கைகள்

சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலை நடாத்தி சிங்களப்படையினருக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தி வீரமரணமடைந்த 81 விடுதலை வேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

வீரமரணம் அடைந்தோர் விவரம்:- கரும்புலி மேஜர் டாம்போ (காசிப்பிள்ளை தயாபரன்-மன்னார்), மேஜர் ரஞ்சன் (செல்வநாயகம் தயாளன் - யாழ்), மேஜர் சதா (நடராஜசப்பெருமாள் தீலிப்
—4ஆம் பக்கம் பார்க்க

### ரஞ்சனின் மகன் சொல்கிறார்

## ஒரு குடும்பத்தில் இருவர் ஒரேமாதிரி இறப்பதா?

''ஜூன் மாத இறுதிக்குள் வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்துவிடுவேன் என எனது தந்தை ஒரு தடவை என்னிடம் கூறினார்.'' சன் விஜேரட்னவின் மகன் திரு ரோகான் விஜேரட்ன கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.
—04 ஆம் பக்கம் பார்க்க

### போதைவஸ்து கடத்தல்

நான்கு லட்சம் ரூபா பெறுமதியான ஹிரோயினைக் கடத்தி வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைவஸ்து தடுப்புப்பொலிஸாரால்கைது செய்யப்பட்டார்.

### மண்ணெண்ணெய் விற்பனை

காரைநகர் ப. நோ. கூ. சங்கம் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்து தமது
—04ஆம் பக்கம் பார்க்க

### கப்டன் அப்பனுக்கு அஞ்சலி

சிலாவத்துறை மோதலில் வீரமரணமடைந்த கைதடி, நாவற்குழி முன்னாள் பிரதேசப் பொறுப்பாளர் கப்டன் அப்பன் - சண்முகம் ஸ்ரீதரனின் அஞ்சலி நிகழ்ச்சி நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

## ரயில்வே உத்தியோகத்தர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம்

தென்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லாத ரயில்வே உத்தியோகத்தர்களது பதவிகள் வெற்றிடமாகக் கணிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தலைமை அலுவலகத்திலிருந்து வடபகுதியிலுள்ள ஒரு சில உத்தியோகத்தர்களுக்கு கடிதங்கள் வந்துள்ளன.

வடிக்கையை பற்றித் தென்பகுதிக்குச் செல்வதா வேலையை இழப்பதா எனத் தெரியாமல் சம்பந்தப்பட்டவர்கள் திக்கற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

குறிப்பிட்ட மாத வேதனமும் இடை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கவலையடைந்துள்ளனர்.

வடக்கு கிழக்கைத் தவிர்ந்த வேறு எப்பகுதியிலாவது ஓர் இரசாயன தொழிற்சாலையை ஆரம்பிக்குமாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கேட்டுள்ளார்.

பரந்தன் ஆலையை தற்போதைய சூழ்நிலையில் இயக்க முடியாது எனவே புதிய ஆலையை தமிழ்பகுதி தவிர்ந்த வேறு எங்காவது ஆரம்பிக்கலாம் எனவும் அமைச்சர் நேற்று கொழும்பில் நடைபெற்ற பரந்தன் இரசாயன ஆலையின் நிர்வாகிகளிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

எனது தந்தை ஒரு தடவை என்னிடம் கூறினார்.''

இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்

தெரிவித்துள்ளார்.

—04ஆம் பக்கம் பார்க்க

வந்துள்ளன.

தற்போதைய யுத்த நட

வர்கள் கவலையடைந்துள்ளனர். 38

# மன்னார் ஆயர் தாக்கப்பட்டது குறித்து பாப்பரசருக்கு மகஜர்

மன்னார் ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வவுனியாவில் வைத்துப்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை யாழ் மேற்றிராசன குருமாரும், ஆயரும், பொது நிலையினர் சமூகத்தினரும் கண்டித்துள்ளனர்.

—04ஆம் பக்கம் பார்க்க

# 100 தங்க பிஸ்கட்டுகள் கடத்தல் விமானப்பணிப் பெண் கைது

எயர் லங்கா விமான உபசரணைப் பெண்மணி ஒருவர் சிங்கப்பூரில் இருந்து நூறு தங்கபிஸ்கட்டுகளை கடத்தி வந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டார்.

இதன் பெறுமதி 7 மில்லியன் ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவர் உள்ளாடையில் மறைத்து வந்தபோது சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 27ம் திகதி போட்டிப் பரீட்சை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கோரப்பட்டிருந்த கலாசார உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அடுத்தமாதம் 27 ஆம் திகதி போட்டிப்பரீட்சை நடைபெறும்.

—04ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டில் பஸ் சேவை அதிகாரிகள் பேச்சு

யாழ் குடாநாட்டுக்குள் ஆரம்பக்கட்டமாகப் பஸ் சேவைகளை நடாத்துவது பற்றி யாழ் அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுகள் நடாத்தி வருகிறார்.

பருத்தித்துறை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, கொடிகாமம், தெல்லிப்பழை, துர்க்கை அம்மன் ஆலயம், குறிகாட்டுவான், காரைநகர், கேரதீவு ஆகிய இடங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவை வெற்றியளிக்கும் பட்சத்தில் குடாநாட்டுக்கு வெளியேயான சேவைகளும் நடாத்தப்பட விருப்பதாகவும்

— 4ஆம் பக்கம் பார்க்க

# சுதந்திரக்கட்சி எம். பி. ஆள்கடத்தியதாக கைது

கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியான ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை ஆள்கடத்தல் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

—04ஆம் பக்கம் பார்க்க

# மொறட்டுவ வங்கியில் பட்டப்பகலில் கொள்ளை

மொறட்டுவவில் உள்ள சேலன் வங்கியிலிருந்து 1.4 மில்லியன் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

வானில் வந்த இனம் தெரியாத ஒருவர் ரிவோல்வருடன் வங்கியின் உள்ளே புகுந்து காசாளரை மிரட்டி இப்பணத்தைக் கொள்ளையடித்து அதே வானில் ஏறித்தப்பிச் சென்று விட்டதாக பொலி

—04ஆம் பக்கம் பார்க்க

# வடபகுதி பொருள்கள் விலை கொழும்புக்கு அனுப்பப்பட்டது

யாழ் மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு வெளிச்சந்தையில் விற்கப்படும் விலைகள் பற்றிய அறிக்கை அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் கோரப்பட்டுள்ளது.

குறிப்பாக அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய், மிளகாய், சவர்க்காரம், தீப்பெட்டி ஆகிய பொருள்களின் விலைகள் குறித்த அறிக்கை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகச் செயலக, வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகள் பல மடங்கு

—04ஆம் பக்கம் பார்க்க

# சுதந்திரக்கட்சி செயலாளர் ஐ. தே. க, கூட்டத்தில் உரை

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எ. தே. கே. சூரியாராச்சி ஐ. தே. கட்சி மேடையில் ஜனா

—04ஆம் பக்கம் பார்க்க

# மூன்று இலட்சம் ரூபாவுக்கு மாற்று சிறுநீரகம்!

## சிகிச்சைக்கு தமிழகம் செல்வோர் தொகை அதிகரிப்பு!!

சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்காக இலங்கையிலிருந்து தமிழகத்திற்குச் செல்வோரின் தொகை சமீப நாட்களாக அதிகரித்து வருவதாக வைத்தியவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருச்சிராப்பள்ளி சிறுநீரக சத்திரசிகிச்சை நிலையத்தில் கடமைபுரியும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.வேல்முருகன் தற்பொழுது கொழும்பு வந்துள்ளார். இவர் இந்நோய்குறித்து வழங்கிய தகவலில்—

★ சிறுநீரகம் 90 வீதம் பாதிக்கப்பட்டால் அவருக்கு மாற்று சிறுநீரகமொன்று சத்திர சிகிச்சை மூலம் மாற்றப்படுவது அவசியமாகும்.

★ ஒருவருக்கு இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. ஆயிரத்தில் ஒருவர் மட்டுமே ஒரு சிறுநீரகத்துடன் பிறக்கிறார். இரண்டு சிறுநீரகத்தை கொண்டுள்ள சுகதேகியான எவரும் தனது ஒரு சிறுநீரகத்தை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்க முடியும். இதனால் வழங்கிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

★ இந்தியாவில் மேற்கு நாடுகளைவிட குறைந்த செலவில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. தமிழகத்தில் சிறுநீரக மாற்று சிகிச்சையை மேற்கொள்ள இலங்கை ரூபாவில் மூன்று லட்சம் ரூபா செலவாகும். சிறுநீரகத்தை நோயாளிக்கு எவரும் இலவசமாக வழங்கினால் இரண்டரை லட்சம் ரூபா மட்டும் போதுமானது.

★ 'டயலிஸிஸ் சேவிங்முறை' எனப்படும் இரத்தத்தை வடிகட்டி கழிவுப் பொருட்களை அகற்றும் முறை மூலம் சிறுநீரக வியாதிக்கு தற்காலிக பரிகாரம் காணமுடியுமென்றாலும் நீண்ட கால நோக்கில் பார்த்தால் சிறுநீரக மாற்று சிகிச்சையே இலாபகரமானது.

★ சிறுநீரக வியாதி உள்ளவர்கள் உடல் முழுவதும் வீக்கமுடையவர்களாக (குறிப்பாக கண், கால் பாதங்களில்) இருப்பதுடன் அடிக்கடி காய்ச்சல், வாந்தி, சிறுநீர் குறைவாக வெளியேறல், கண்ணில் நிறமாற்றம், சிறுநீர்வாடை உடல் முழுவதும் வீசுதல் ஆகிய அறிகுறிகளைக் கொண்டிருப்பர்.

---

தமிழகத் தேர்தல் களம்

### 'தலைவி என்றால் அம்மாதான்'

திரு இரா.நெடுஞ்செழியன் அறிஞர் சி. என். அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தை அவருடன் இணைந்து உருவாக்குவதற்கு முன்னரே திராவிடக் கழக ஸ்தாபகர் ஈ. வெ. ரா. பெரியாருடன் கூட, தீவிர இணைவு கொண்டிருந்த பெருமை பெற்றவர். அவரது மகள் போன்றவர் அ. தி. மு. க. பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா. அவரை நெடுஞ்செழியனும் ஏனைய தொண்டர்கள், பிரமுகர்கள் போல் 'அம்மா' என்றே அழைக்கிறார். தலைவி என்று ஏற்றுக் கொண்டு விட்டால் 'அம்மா'' என்று அவரை நெடுஞ்செழியன் அழைப்பதில் தவறேயில்லை என்கிறார் நெடுஞ்செழியனின் நிரந்தரமான சீடர் ஏ. என். சுவாமி.

### பாம்பை அடிப்பதற்கு...

''பாம்பை அடிப்பதற்கு எப்படிக் கையில் கிடைப்பதையெல்லாம் பயன்படுத்துகிறோமோ அதுபோல் ஜெயலலிதாவை முதலமைச்சராக விடாமல் தடுப்பதற்குத் தகுந்த உத்தியை நாம் மேற்கொள்வதில் தவறில்லை'' என்று முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

"ஜெயலலிதா எதிர்ப்புச் சக்திகளை இணைக்கும் பாலமாக திருநாவுக்கரசு அணி இருக்கும்' என்றும் சொன்னார் அவர்.

### 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு'

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூட இந்திரா காங்கிரஸ் வலையில் சிக்கிய மீன்தான் என்று திரு. ராஜீவ்காந்தி கணக்குப் போட்டுள்ளாராம்.

சந்திரசேகரை "அம்போ' என்று கைகழுவ அவரது கட்சி எம். பிக்கள் ஐம்பது பேர் தயாராம்.

வி. பி. சிங்கின் ஜனதாதளத்திலிருந்து இ. காங்கிரஸ் பதினெட்டு எம். பிக்களை விலைபேசி விட்டதாம்.

தேர்தல் நெருங்க நெருங்கக் கட்சிமாறல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் கட்சிமாறல் தடைச்சட்டம் தான் உதைக்கிறதாம்.

### 'யோவ், நான் நல்லாயிருப்பது பிடிக்கலையா'

ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை ஏற்க ஜெயலலிதா காரில் வந்தார். தலைமைக் கழக வளாகத்தில் அவர் இறங்கும்வரை ஒரே வாழ்த்து முழக்கங்கள். அடுத்த சில வினாடிகளில் ஆர். எம் வீரப்பன் (மாஜி மந்திரி) காரில் வந்து இறங்கினார். ஒரே ஒரு குரல் 'ஆர் எம் வீ.' என்று கோஷம் எழுப்பியது. 'வாழ்க' என்று அடுத்த கோஷம் எழுப்புவதற்கு எவரும் வாயைத் திறக்கவில்லை. நல்லவேளை அந்தக் குரல் அம்மாவின் காதில் விழவில்லையே என்று வீரப்பனுக்கு ஒரு திருப்தி. 'யோவ், நான் நல்லாயிருப்பது உனக்குப் பிடிக்கவில்லையோ? வாயை மூடிக் கொண்டு போய்யா' என்று எரிச்சலைக் கொட்டிவிட்டு ஜெயலலிதாவைத் தொடர்ந்தார்.

---

## வங்கி வெற்றிடங்களுக்கு 450 லிகிதர்கள் நியமனம்

1990 மே மாதம் நடைபெற்ற வங்கி லிகிதர், தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சை முடிவுகளின்படி 450 பேர் வங்கிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவந்துள்ளது.

பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளி விவரங்கள் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனக் கொள்கை திட்டமிடல் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அபிவிருத்தி வங்கி ஆகியன லிகிதர்கள் தேவை என அறிவித்ததைத் தொடர்ந்தே மாவட்ட ரீதியில் திறமையின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (ப-10)

### ஈழகேசரி நினைவு தினம்

ஈழகேசரிப் பொன்னையாவின் நாற்பதாவது நினைவு தினத்தைக் குரும்பசிட்டி சன்மார்க்க சபை இம்மாதம் முப்பத்தோராம் திகதி ஞாயிறு காலை ஒன்பது மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் கொண்டாடவுள்ளது.

'யாழ்ப்பாணத்தில் தொடரும் பண்பாடும் 1930ஆம் தசாப்தத்து ஈழகேசரிப் பத்திரிகையைத் தளமாகக் கொண்ட ஒரு தொடர்பியல் நோக்கு' என்ற பொருளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

### கிளிநொச்சியில் ஐந்து நிலையங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கென ஐந்து பரீட்சை நிலையங்கள் திறுவப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகியவற்றிலேயே பரீட்சை நிலையங்கள் திறுவப்படவுள்ளன.

பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் ஏப்ரல் மாதமளவில் கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (38)

### எண்ணெய், 10 ரூபா கேள்கலனோ...

வவுனியாவில் 1 லீற்றர் மண்ணெண்ணெய் 10 ரூபாவுக்கு விற்கப்படும் அதே வேளை அதனை வாங்கி வர 1 பிளாஸ்டிக் கலனுக்கு 75 ரூபா கொடுக்க வேண்டியுள்ளது. (ப-10)

### 'மைக்கிரஸ்கோப்'

---

## தீயை அணைக்க உதவியவர் பொறிவெடியில் காலை இழந்தார்

தீப்பிடித்த மண்ணெண்ணெய் லொறியின் தீயை அணைக்க உதவிக்கு ஓடிய வேறு ஒரு லொறியின் கிளீனர் ஒருவர் வீதியின் அருகே புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறிவெடியில் தனது காலினை இழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 24ஆம் திகதி வவுனியா - தாண்டிக்குளத்தில் நிகழ்ந்துள்ளது. (ப-10)

## ஏப்-5 முதல் மே-6 வரை தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படும்

சகல அரசாங்க பாடசாலைகளும் முதலாம் தவணை விடுமுறைக்காக ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பாடசாலைகள் மே மாதம் ஆறாம் திகதியும் முஸ்லிம் பாடசாலைகள் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியும் இரண்டாம் தவணைக்காக மீண்டும் திறக்கப்படவுள்ளன.

## மாணவரின் மகாபொல 'கல்பொல்' இல் கரைகிறது

பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்படும் மகாபொல புலமைப்பரிசில்களை பெரும்பான்மையினான மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி ஊக்குவிப்புடன் வழங்கப்படும் இந்நிதியை பிரயோசன மாணவர்கள் உரிய வழியில் செலவிடாது கல்பொல' சாராய வகைகளை அருந்தி மகிழ்வுடன் காலத்தை வீண்போக்கி செலவிடுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில் நிதி 3 மாதங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## 8 அதிகாரிகள் மீது அரசு விசாரணை

அரசு சார்பற்ற ஸ்தாபனங்களின் செயற்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 8 அரச உயர் அதிகாரிகளைச் சமூகமளிக்கும்படி கட்டளையிட்டுள்ளது.

இந்த ஸ்தாபனங்களினால் பெறப்பட்ட நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும், தேசிய நலனைப் பாதிக்கும் வகையில் அந்த நிதி உபயோகிக்கப்பட்டதாகவும் விசாரணை செய்த பொலிசார் தெரிவித்தனர்.

---

## குவைத் புனரமைப்பு பூர்த்தியாக பத்து வருடமாகும் என கணிப்பு

வளைகுடா யுத்தத்தின் விளைவாக ஈராக்கினால் சேதமாக்கப்பட்ட குவைத்தை மீண்டும் புனரமைப்பு செய்ய 3000 கோடி டொலர் முதல் 5000 கோடி டொலர் வரை செலவாகும் எனவும் புனர தெரியவந்துள்ளது.

இப்புனரமைப்புக்கான முன்னைய மதிப்பீடு 10,000 கோடி டொலர் செலவாகும் என மதிப்பிட்டிருந்தாலும் தற்போது குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது என

5000 கோடி டொலர் வரை செலவாகும் எனவும் புனரமைப்பு பூர்த்தியடைய 5—10 ஆண்டுகள் செல்லும் எனவும் தற்போது குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது என பிரிட்டினில்] உள்ள குவைத் தூதுவர் தெரிவித்தார். (ப10)


சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

தமிழ்த்தொண்டர் 'ஈழகேசரி'

நா. பொன்னையா

## நாற்பதாவது நினைவு தினம்

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்

காலம்: 31-03-1991 ஞாயிறு காலை 9.00 மணி

தலைமை: கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்

நினைவுப் பேருரை:

''யாழ்ப்பாணத்தில் 'தொடர்பும்' பண்பாடும் —1930 ஆம் தசாப்தத்து ஈழகேசரிப் பத்திரிகையைத் தளமாகக் கொண்ட ஒரு தொடர்பியல் நோக்கு''

கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர்

(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரசாரப்பிரிவு
குரும்பசிட்டி
தெல்லிப்பழை.

க. இராமநாதன்
பிரசார செயலாளர்.

03126


...வேளை அதனை வாங்கிவர 1 பிளாஸ்டிக் கலனுக்கு

## நேர்முகத் தெரிவு

தமிழீழ ஆய்வு நிறுவனம் நடாத்தும் பனைத் தொழில் வல்லுநர் பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றவுள்ள அனைவரையும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தமிழீழ ஆய்வு நிறுவனத் தலைமைப் பணியகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தெரிவிற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


## சிறு விளம்பரம்

### வகுப்பு

S. L. E. A. S. துரித பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 30 3.91. அச்சடித்த பாடக்குறிப்புகளும் மாதிரி வினாவிடைகளும் இலவசம் முழுக்கட்டணம் ரூபா 250.00 School of Business Administration, 16, சிவன் குறுக்குவீதி. யாழ்ப்பாணம். 03118


## 'மைக்கிரஸ்கோப்' அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் நோயாளர் நலன் கருதி 'மைக்கிரஸ்கோப்' கருவி ஒன்றை கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கிளி அரச அதிபர் வழங்கியுள்ளார்.

இக்கருவி மூப்பதினாயிரம் ரூபா பெறுமதியுடையது.

உடலில் இரத்தப்பற்றாக்குறை நோய் கிருமிகளின் இருப்பிடம் என்பவற்றைக் கண்டறிய இக்கருவி உதவும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-6)

## சபை குண்டுவெடிப்பு எதிரி விடுதலை

பாராளுமன்றத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு வழக்கில், வழக்கை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதி எதிரியை விடுதலை செய்துள்ளார்.

இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு விண்ணப்பத்தை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த போதும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.


JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
Vaddukoddai

# VACANCY

POST OF ACCOUNTS CLERK
(Trainee)

Applicants should have six passes in G. C. E (O/L) including English & Maths.

Knowledge of Book Keeping & general clerical work will be a definite advantage.

Preference to those with G.C E (A/L) qualification

Salary : Negotiable
Age : Around 30 years

Send your applications to :
Director
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**

Closing date : 10 days from the date of this notice.

DIRECTOR

03125

# புதிய ஆசிரியர் நிருவாக சேவை
# செப்டெம்பரில் நடைமுறைக்குவரும்

ஆசிரியர்களை உள்ளடக்கிய ஸ்ரீலங்கா ஆசிரியர் நிருவாக சேவை (எஸ். எல். ரி. எஸ்) எனப்படும் புதிய அமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளது.

இலங்கை நிருவாக சேவை, இலங்கை கல்வி நிருவாக சேவை என்பனவற்றை ஒத்ததாக இப்புதிய சேவை உருவாக்கப்படவுள்ளது. இவற்றிற்கென தரங்களும் உருவாக்கப்படவுள்ளன.

செப்டெம்பர்மாதத்திலிருந்துஇப்புதிய சேவை நடைமுறைக்குவரும். இலங்கையில் தற்பொழுது கடமைபுரியும் ஒரு லட்சத்து எண்பத்து நாலாயிரம் ஆசிரியர்கள் ஸ்ரீலங்கா ஆசிரியர் சேவைக்குச் சேர்க்கப்படவுள்ளனர்.

## மரணவாசலுக்குச் சென்று திரும்பியவர் மரணத்தை தழுவிய ரஞ்சனைப்பற்றி...

''அரசாங்கக் கடமைகளோ, வேறு நிகழ்ச்சிகளோ இப்போது எனக்கு இல்லாததினால் நான் போதிய நேரம் ஓய்வாக இருக்க முடிகின்றது.''

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவரைச் சுகம் விசாரிக்கச் சென்ற பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினார்.

ஜெயவர்த்தன கடுமையாக நோய்வாய்ப்பட்டு இருந்தார். அவர் இறந்துவிட்டாரென்றும் நாடு முழுவதும் பரவலாக வதந்திகள் பரவின.

அவரை நிருபர்கள் சந்திக்கப்போனபோது சற்றுத் தேறியிருந்தார். அவரோடு நீண்டநேரம் உரையாட வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

''ரஞ்சன் விஜேரட்னாவை நான் தான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தினேன். அது ஒரு நீண்டகதை தற்போதைய நிலையில் என்னால் அதைக் கூறமுடியாது'' என்று நிருபர்களுக்குக் கூறினார்.

ரஞ்சன் விஜேரட்ன மரணமானதற்கு இரு நாட்களுக்கு முன்பு தன்னைச் சந்தித்ததாகவும் அவர் கூறினார்.

அவரது சுகயீனத்தைப் பற்றி வினாவப்பட்டபோது வளைகுடா யுத்தம் போன்று இருந்தது எனதுசுகயீனம்' என்றார்.

## பாடசாலைகளுக்கு பாடநூல் விநியோகம்

பளை கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு பாடநூல்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய பாட நூல்கள் தற்பொழுது பூநகரி மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அடுத்த சில தினங்களில் இவை பளைக்கு எடுத்துவரப் பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

## நிருவாக சேவை முடிவு வெளியானது

1990 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நடாத்தப்பட்ட இலங்கை நிருவாக சேவை போட்டிப் பரீட்சை (வெளிவாரி) முடிவுகள் கொழும்பில் வெளியிடப் பட்டுள்ளன.

## மன்னாரில் தபால்கள் தேக்கம்

மன்னாரில் ஆயிரக் கணக்கான உள்நாட்டு வெளிநாட்டுக் கடிதங்கள் தேங்கிஉள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. தபால் அதிபருடன் தொடர்பு கொண்டால் இவை உரிமையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என மன்னார் தபால் அத்தியட்சகர் ப. துரைசாமி அறிவித்துள்ளார். (ப-10)

## இன்று பெரிய வியாழன்



இன்று உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் பெரிய வியாழன் தினத்தை அனுஷ்டிக்கிறார்கள். இதனையொட்டி இன்று மாலை கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட வழிபாடுகளும், அன்று யேசுநாதர் தனது சீடர்களின் பாதங்களைக் கழுவியதை நினைவு கூரும்முகமாக 'பாதங்கழுவுதல் சடங்கும்' இடம் பெறவுள்ளன. இன்று இரவு முழுவதும் ஆலயங்களில் நற்கருணை ஆராதனைகள் தொடர்ந்து இடம்பெறும். ¢16

## 'கொழும்பில் வெடிக்கும் ஒவ்வொரு குண்டும் பொருளாதாரத்தைத் தாக்கும் குண்டே'

கொழும்பில் வெடிக்கும் ஒவ்வொரு குண்டும் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை தாக்கும் குண்டு' என்கிறார் அமைச்சர் அலவி.

அவர் கொழும்பில் நடந்த வைபவமொன்றில் உரையாற்றுகையில் 'கொழும்பில் ...ப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து ஜப்பான் முன்னரைப்போல் ஸ்ரீலங்காவில் பெருமளவு முதலீடுகளைச் செய்ய தயங்கி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பெயர்ப் பலகையில் தமிழ்ப் பதங்கள்

மாபெரும் முத்தமிழ் விழாவையொட்டி வடமராட்சிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள் முற்று முழுக்க தமிழ்மொழிமயப் படுத்தப் பட்டு வருகின்றன.

(நேற்றைய தொடர்ச்சி)

# இது புலிகளுக்கெதிரான யுத்தமல்ல தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம்

### அகதிமுகாம் மீதும் தாக்குதல்

இலவதவிர, யாழ்ப்பாணத்தில் கொக்குவில் என்னும் கிராமத்தில், அகதி முகாமொன்று தாக்கப்பட்டது. அந்த அகதி முகாமில் 43 குடும்பங்கள் இருந்தன மூன்று அகதிகளுக்குக் காயம் ஏற்பட்டது ஒரு இளம் பெண் காலை இழந்தார். கோண்டாவில், பூநகரி, கிளிநொச்சி, முறிகண்டி ஆகிய இடங்களிலும் பெப்ரவரி மாதம் முற்பகுதியில் விமானத் தாக்குதல்கள் நிகழ்ந்தன.

### நோக்கம் என்ன?

இந்தத் தாக்குதல்கள் எல்.ரி.ரி.ஈ போராளிகளை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. அப்பாவிப்பொது மக்களை இப்படிக் கண்மூடித்தனமாகக் கொல்வதால் விமானப் படை எதைச்சாதிக்க முயலுகின்றதோ, தெரியவில்லை!

### உணவுக்காக அலையும் மக்கள்

இப்படிப்பட்ட தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களாலும் பொருளாதாரத் தடைகளாலும் யாழ்ப்பாண மக்கள் விவரிக்க முடியாத அளவுக்குக் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். வாழ்வா, சாவா என்ற நிலை ஏற்பட்டுள்ளது ஹெலித்தாக்குதல்களைத் தவிர்த்து, உணவுப் பொருட்களைத் தேடிக் கடைகளை வலம் வருவதே யாழ்மக்களின் தினசரிகடமைகளாகி விட்டன. உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அரிசி கிலோ 60 ரூபாவாகவும், சீனி கிலோ 70 ரூபாவாகவும் விற்பனையாகின்றன.

### புராதனகாலத்தை நோக்கி...

ஒன்பது மாத யுத்த காலத்தில் யாழ்ப்பாணம் புராதன கால வாழ்க்கை முறைகளுக்குத் தள்ளப்பட்டு விட்டது. மின்சாரம், தொலைபேசி போக்குவரத்து வசதிகள்ஒன்றுமேயில்லை. றோட்டில் பஸ்களையோ, கார்களையோ, காணமுடியாது. பிரதான போக்குவரத்து சாதனம் சைக்கிள்தான். அரசாங்க அதிபர் உட்பட சகலரும் சைக்கிளில்தான் பிரயாணம் செய்கின்றார்கள்.

பொருளாதாரத் தடைகளும், விமானத் தாக்குதல்களும், மக்களுக்கு அரசின்மேல் வெறுப்புணர்ச்சியை உருவாக்கி உள்ளன.

### 'இது தமிழ்மக்களுக்கெதிரான யுத்தம்'

''அரசாங்கம் எங்களைப் பட்டினி போட்டும், குண்டுபோட்டும் அழிக்கக் கங்கணம் கட்டியுள்ளது. இது புலிகளுக்கு எதிரான யுத்தமல்ல. தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம். அரசாங்கம் புலிகளுடன் யுத்தம்புரிய விரும்பினால், புரியட்டும். எங்கள் எல்லோரையும் கொல்ல ஏன் முற்படுகின்றது? எங்கள் உணவைத் தடைசெய்கிறார்கள். குண்டுகள் வீசி எம்மைக் கொல்லுகிறார்கள்'' இப்படி உணர்ச்சிவசப்பட்டு ஒரு பத்திரிகையின் ஆசிரியர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் மிகவும் கஷ்டமான, கொடூரமான, சூழ்நிலையின் காரணமாக ஆயிரக்கணக்கானோர் யாழ்ப்பாணத்தை விட்டுப் போய்விட்டார்கள். வசதிபடைத்தவர்கள் இந்தியாவிற்கும், மேற்குநாடுகளுக்கும் சென்று விட்டார்கள்.

### எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

விடுதலைப் புலிகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தம் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது பொதுமக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஒரு சமாதானத் தீர்வுக்கு இது வழிகோலும் என்றே எல்லோரும் நம்பியிருந்தனர். விடுதலைப் புலிகளாலும் தமிழர்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை அரசு முன்வைக்க வேண்டும் என்றே எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

சமீபத்தில் பொதுமக்கள் மீது நிகழ்த்தப் பட்ட குண்டுத் தாக்குதல்கள், குறிப்பாக வல்வெட்டித்துறை மீது நடைபெற்ற தாக்குதல்கள் பேச்சுவார்த்தை குறித்துவிடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைக் கடுமையாக்கி விட்டன.

### ''பேச்சுவார்த்தைக்குத் தயார்!''

''நோர்வே அரசாங்கத்தினாலும் கனேடிய அரசாலும் நெருக்கடி கொடுக்கப்பட்டதனாலேயே யுத்த நிறுத்தம் செய்தோம்'' என அன்ரன் பாலசிங்கம் சொன்னார்.

''நாங்கள் எப்போதும்பேச்சு வார்த்தைக்குத் தயார். ஆனால் அரசு இராணுவத் தீர்வையே விரும்பினால், நாங்கள் திருப்பித் தாக்குவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று கூறிய மாத்தயா ''ஆயுதங்களைக் கீழே வை'' என்ற நிபந்தனை ஏற்க முடியாதது'' என்று தெரிவித்தார்.

இலங்கை இராணுவம்கொடுத்த நெருக்கடியின் காரணமாகவே யுத்த நிறுத்தம் அரசினால் கைவிடப்பட்டதெனத் தெரிகின்றது.

ஜனாதிபதி பிரேமதாசா புலிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஆனி மாதம் வரை கால அவகாசம் இராணுவத்திற்குக் கொடுத்துள்ளார்.

ஆனி மாதத்திற்குள் இராணுவம் புலிகளைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரத் தவறின் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம்.

தமிழில் : வி. பி

# அடிக்கடி நிலைமாறும் 'சுவாமி'!

அவர் ஒரு பேராசிரியர். அசட்டுத்துணிச்சல் காரர். சிந்தித்துப் பேசுவதில்லை. பேசிய பின் சிந்திப்பவர் சூழ்ச்சிசெய்வதில் வல்லவர். சதி செய்வதில் நிபுணர். எவரையும் எளிதில் பகைப்பார். முதலமைச்சரை மட்டுமின்றி ஹெக்டே போன்றவர்களையும் இவர் விட்டு வைக்கவில்லை.

கர்நாடக முதல்வராக இருந்த இராமகிருஷ்ண ஹெக்டேயை இவருக்குப் பிடிக்கவில்லை. பல்வேறு குற்றங்களை அவர் மீது சுமத்தினார். பொதுமக்கள் இவர் ...

ஒரு குண்டும் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை தாக்கும் குண்டு' என்கிறார் அமைச்சர் அவர்.

அவர் கொழும்பில் நடந்த வைபவமொன்றில் உரையாற்றுகையில் 'கொழும்பில் குண்டு வெடித்ததும் அச்செய்தி அடுத்த கணமே எல்லா நாடுகளுக்கும் காட்டுத்தீ போல பரப்பப்பட்டு விடுகிறது. இதன் விளைவாக உல்லாசப் பயணிகள் இங்கு வருவது தடுக்கப்படுகிறது. நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய பெருமளவு அந்நியச் செலவாணி இடைக்காமல் போய்விடுகிறது' எனக் குறிப்பிட்டார்.

அமைச்சர் ரஞ்சன் கொல் ... சம்பவத்தையடுத்து ஜப்பான் முன்னரைப்போல் ஸ்ரீலங்காவில் பெருமளவு முதலீடுகளைச் செய்ய தயங்கி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

... விழாவையொட்டி வடமராட்சிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள் முற்று முழுக்க தமிழ்மொழிமயப் படுத்தப் பட்டு வருகின்றன.

# ‘விஜயதுங்க வந்ததால் போர் ஓயுமென நினைப்பது தவறு’

“தமிழீழம் பெறும்வரை எமது போராட்டம் தொடரும் குண்டுகளும், ஷெல்களும் வரத்தான் செய்யும். விஜயதுங்க வந்து விட்டார். யுத்த நடவடிக்கை ஓய்ந்து விடும் என்று நினைப்பது தவறு. அவர் அமைச்சரவையில் பொம்மைக்குச் சமமானவர்.” என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு யோகரத்தினம் யோகி கூறினார்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேஜர் செங்கதிர், சிந்து ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் பாதுகாப்பு அமைச்சராக எவர் வந்தாலும் எமது இலட்சியத்தை நோக்கி எமது போராட்டப் பயணம் தொடரும்.

அரசாங்கம் பொருளாதாரத்தடையை வடக்கில் ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையில் வெறுப்புணர்வை உண்டு பண்ண கனவு காண்கிறது. நாம் உற்பத்தித்துறையில் ஈடுபட்டு எமது சோதனைக் காலிக் நிற்க வேண்டும்” என்றார். (38

# 9 பாடசாலைகளில் இராணுவம்

## 3263 மாணவர் கல்வி பாதிப்பு

இராணுவ நடவடிக்கை காரணமாக ஊர்காவற்றுறை கரம்பொன், மெலிஞ்சிமுனை, தம்பாட்டி, நாரந்தனை ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பொன் சண்முகநாத, சிறிபுஷ்ப மகளிர் வித்தியாலயம் போன்ற பெரிய பாடசாலைகளை உள்ளடக்கிய புனித அந்தோனியார் கல்லூரியின் கொத்தணியைச் சேர்ந்த ஒன்பது பாடசாலைகளில் இராணுவம் நிலைகொண்டிருக்கிறது. இதனால் இப்பாடசாலைகளிலிருந்து இடம்பெயர்ந்த 3263 மாணவ, மாணவிகள் தகுந்த பாடசாலைகளோ பாடசாலை உபகரணங்களோ இன்றிப் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

---

அவர் ஒரு பேராசிரியர். அசட்டுத்துணிச்சல்காரர். சிந்தித்துப் பேசுவதில்லை. பேசிய பின் சிந்திப்பவர் சூழ்ச்சிசெய்வதில் வல்லவர். சதி செய்வதில் நிபுணர். எவரையும் எளிதில் பகைப்பார். முதலமைச்சரை மட்டுமின்றி பிரதம மந்திரியையே பதவி இழக்கச் செய்து இருக்கின்றார். இவரை எல்லோரும் வெறுக்கிறார்கள், இருப்பினும் இந்திய அரசியல் வானில் பவனி வருகிறார்.

யார் இவர்? இவர்தான் சுப்பிரமணிய சுவாமி. இந்தியாவின் தற்போது கலைக்கப்பட்ட மத்திய அரசின் சட்ட, வர்த்தகத்துறை அமைச்சர். இவர் வலியப்போய்ப் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வார். பிரச்சினைக்குரிய விடயங்களையே பேசுவர்.

நாடாளுமன்றத்தில் ஒரு நாள் சபாநாயகரைக் கைது செய்யப் போவதாகப் பயமுறுத்தினார். அவருடைய இந்தப் பய முறுத்தல் பெரும் கிளர்ச்சியை உருவாக்கியது. பிரதமராகவிருந்த சந்திரசேகர் மன்னிப்புக் கோரிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைத்தார்.

இப் பிரச்சினை முடிந்த கையோடு நிதி மந்திரியைச் சாடினார். எரிபொருளின் விலையைக் கூட்டியது தவறு என்றார். மந்திரிசபையின் கூட்டுப்பொறுப்பை மீறி விட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இப் பிரச்சினையும் சமாளிக்கப்பட்டது

வி. பி. சிங்கைக் கவிழ்ப்பதற்குச் சந்திரசேகர் குழுசெய்த சூழ்ச்சியில் சுப்பிரமணிய சுவாமிக்கு முக்கிய பங்கு உண்டு.

சூழ்ச்சி செய்வதைத்தவிர சதித் திட்டம் தீட்டுவதிலும் ஆற்றல் மிக்கவர். ஒருவருடைய வீழ்ச்சிக்கு அடிகோலுவதற்குச் சகல விடயங்களையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து செயற்படுத்துவார். இப்படியான விடயங்களில் மிகவும் பிரபலமான நபர்கள் மீதுதான் கை வைப்பார். வி. பி. சிங், வாஜ்பாய்இராமகிருஷ்ண ஹெக்டே போன்றவர்களையும் இவர் விட்டு வைக்கவில்லை

கர்நாடக முதல்வராக இருந்த இராமகிருஷ்ண ஹெக்டேயை இவருக்குப் பிடிக்கவில்லை. பல்வேறு குற்றங்களை அவர் மீது சுமத்தினார். பொதுமக்கள் இவர் கூற்றை அசட்டை செய்தனர். பத்திரிகைகளும், இவரது கட்சியும் "இவர் என்ன அலட்டுகிறார்" என நினைத்தன.

ஆனால் சுவாமி தனது தாக்குதலைத் தொடர்ந்தார். இரு வருடங்களில் ஹெக்டேயின் புகழ் சரிந்தது. இறுதியில் அவர் பதவியையே இழக்க நேரிட்டது.

ஒரு குறிக்கப்பட்ட நேரம் மட்டும் அதுவும் தனக்கு உபயோகமாக இருப்பார்கள் என அவர் கருதுபவர்களை மட்டும், தேர்ந்தெடுத்து நட்புப் பூணுவது அவரது இன்னொரு கொடை. அது மட்டுமின்றி, தனக்குத் தேவையான போது எந்த எதிரியையும் நண்பனாக்கிக் கொள்வதில் நிபுணத்துவம் பெற்றவர் இவர்.

1983 இல் சந்திரசேகரின் பரம எதிரியாக இருந்தவர். 1990 இல் அவரையே பிரதமராக்கி மந்திரிசபையிலும் சேர்ந்தார்.

ராஜீவ் காந்தியைச் சந்திரசேகருடன் இணைத்ததும் இவர்தான். இரு கட்சிகளும் இணைந்து அரசமைக்கத் தீர்மானித்த பின்பு, இணைப்பிற்கான நிபந்தனைகளைத் தயாரிக்கும் பணி இவரிடம்தான் விடப்பட்டது.

இவரிடம் எவ்வளவு குறைபாடுகள் இருப்பினும் சந்திரசேகருக்கு இவர் மீது மரியாதையும், விருப்பமும் உண்டு.

ஆனால் 1988 இல் ஜனதாக் கட்சியின் தலைமைப் பீடத்திற்கு சந்திரசேகரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்றார். தோற்ற பின்பு, தேர்தலில் தில்லு முல்லு நடந்ததாகக்

— 04ஆம் பக்கம் பார்க்க

● இடைவழியில் விற்பதால் அரசாங்க அதிபர் நடவடிக்கை

# மண்ணெண்ணெய் எடுத்து வரும் பெர்மிட்

# 14 நாட்களுக்கே இனிச் செல்லுபடியாகும்

குடாநாட்டுக்குமண்ணெண்ணெய் கொண்டு வருவதற்கு யாழ் செயலகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை சிலர் துஷ்பிரயோகம் செய்து வருவதாக கிடைத்த புகார்களையடுத்து, அதன் காலம் பதினான்கு நாட்கள் வரையேசெல்லுபடியாகும் என அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை முதல் தடவையாக மண்ணெண்ணெய் கொண்டு வரப்பெறப்பட்ட பெர்மிட்டுகளைப் பெற்றவர்கள் தாம் இங்கு மண்ணெண்ணெய் கொண்டு வந்ததை அரச அதிகாரிகளால் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அதன் பின்னரே தொடர்ந்தும் மண்ணெண்ணெய் எடுத்துவர அனுமதிக்கப்படும் எனவும், அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களில் பலர் அனுமதிப்பத்திரம் பெற்று அனுராதபுரம், கொழும்பு சென்று மண்ணெண்ணெய் கொண்டு வந்த போதிலும் அது இங்குள்ள மக்களுக்கு கிடைக்காமல் இடைவழியில் விற்கப்படுவதாகவும் புகார்கள் கிடைத்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மண்ணெண்ணெய் ஏற்றிக் கொண்டு சில லொறிகள் இங்கு வரவிருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 66

## சிறுவர் பாதுகாப்பு அலுவலகம் திருகோணமலைக்கு மாற்றம்

யாழ்மாவட்டத்தில் இயங்கிவந்த சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு உதவி ஆணையாளர் அலுவலகம் திருகோணமலைக்கு மாற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய எட்டு மாவட்டங்களுக்கு தலைமை அலுவலகமாக இயங்கி வந்த இந்த அலுவலகத்தில் கடமையாற்றிய சகல ஊழியர்களையும் தளபாடங்களையும் திருமலைக்கு அனுப்பிவைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆயிரத்திற்கும் அதிகமான சிறார்களைப் பராமரிக்கும் நிலையங்கள் யாழ் மாவட்டத்திலேயே உள்ளதாகவும் ஏனைய இடங்கள் எல்லாவற்றையும் சேர்த்தால் நூற்றுக்கும் குறைவான பிள்ளைகளே அங்குள்ள நிலையங்களில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 66

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு விரைவில் வைத்தியர் நியமனம்

மந்திகை ஆஸ்பத்திரிக்கு உள்ளகப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த நாலு வைத்தியர்கள் அடுத்தமாதம் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். ஜனகசபை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபைக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் ஏழு டொக்டர்களும், குழந்தை, மன நோய் டொக்டர்களையும் நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேலை மேற்பார்வையாளராக எம் சுப்பிரமணியமும் உணவு தயாரிக்கும் பகுதி மேற்பார்வையாளராக திருமதி எஸ். பாலசுந்தரமும் சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (15)

## யாழ் செஞ்சிலுவைச் சங்க புதிய நிர்வாகிகள் கூட்டம்

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் புதிய நிர்வாகிகளின் முதலாவது கூட்டம் ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதிய தலைவர் டொக்டர் சி. எஸ் நச்சினார்க்கினியர் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான செயற்திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

சகல நிர்வாக சபை அங்கத்தவர்களும் இக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு செயலாளர் அறிவித்துள்ளார். 66

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நோயாளர் தொகை அதிகம்

கிளிநொச்சி பகுதியில் மலேரியா, வயிற்றுளைவு, வயிற்றோட்டம் காய்ச்சல் போன்ற நோய்கள் பலருக்கு பிடித்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிலர் ஆஸ்பத்திரியில் வழங்கப்படும் மருந்துகளை முழுமையாகவும், முறையாகவும் பயன்படுத்தாததாலே நோய் மீண்டும் வந்து விடுவதாகச் சுகாதாரப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு தினமும் வரும் நோயாளர்களின் தொகையும் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. 66

பதிவாளர் அலுவலகத்தில்

## அரிக்கன் லாம்பு தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது

யாழ் செயலகத்தில் உள்ள பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அரிக்கன் லாம்புடன் ஒருவர் வந்தது குறித்தும் அந்த லாம்பு எப்படி பதிவேடுகள் உள்ள அறைக்கு கொண்டு செல்லப்பட்டது தொடர்பான செய்தி நிதியும் விசாரணை நடைபெறுவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்படியான பதிவேடுகள் உள்ள இடத்திற்கு எரியும் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாது என்றும் இச்சம்பவம் உண்மையானால் அதில் தொடர்புடைய ஊழியர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 66

## இரத்த தானம் அத்தாட்சிப் பத்திரம்

கடந்த வாரங்களில் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்தவர்களுக்கு "தேசிய இரத்த மாற்றும் பிரயோக சேவை" அத்தாட்சிப் பத்திர அட்டை விரைவில் வழங்கப்படவுள்ளதாக இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்த பொது மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 74

### சிலாவத்துறையில்...

குமார்-யாழ்), மேஜர் செட்டி (கந்தசாமி செல்வகுமார் - ) கப்டன் பங்கர் (செ. ரவீந்திரன் - மன்னார்), கப்டன் மொறிஸ் (சண்முகம் தவராஜா - யாழ்), கப்டன் அப்பன் (சண்முகம் சிறிதரன்), லெப். குட்டி (இராசநாயகம் செல்வக்குமார் -யாழ்), லெப். நாதன் (தியாகராசா சிவானந்தன் - யாழ்), லெப். ஜொனி (சத்தியவான் சத்திவேல் - யாழ்), லெப். றெபேட் (குலநாதன் குலமோகன் - யாழ்), லெப். கைமன் (நாகராசா சேகரரூபன்-யாழ் , லெப். நேதாஜி (இரட்ணசிங்கம் மங்களேஸ்வரன்-யாழ்), லெப் காஸ்ரோ (நடேசபிள்ளை செந்தூரன் - யாழ்), லெப். சுரேந்தன் (சுபாலி பாலிதாத்-மன்னார்), லெப். சுகந்தன் (சி. பீற்றர் அழகுராசா - மன்னார்), லெப். யூரோம் (வை. அந்தனி காந்-மன்னார்), லெப் சுஜன் (செபஸ்தியாம்பிள்ளை விஜயநாத் - மன்னார்), லெப். கலா (வசந்தி இராசரட்டினம் -யாழ்), லெப். பரணி (செல்லத்துரை தவராஜா - ), லெப். டெனிக் சுந்தர்குகதாசன் - யாழ்), 2ம் லெப். ரஞ்சித்தாதா (பிரிகாமு குணபால...

### சுதந்திரக்கட்சி எம்.பி.

அனுராதபுரம் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை இவரும் ஆறு பேரும் கடத்திச் சென்று சட்ட விரோதமாகத்தடுத்து வைத்ததாக குற்றம்சாட்டப்பட்டுளளனர்.

கடத்திச் செல்லப்பட்டவர் வேலை வாய்ப்பு ஏஜென்ஸி என்றும், குறித்த ஆறு நபர்களிடமும் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக 12 லட்சம் ரூபா பெற்றிருந்தார் எனவும் திரு பெர்னாண்டோ பிள்ளை பொலிஸாரிடம் தெரிவித்தார்.

-யோகசாமி செந்தூரன் (யாழ், அம்பி (நாகலிங்கம் கனகரட்ணம் ரஞ்சன் -யாழ்) ஆனோல்ட் (இருணபிள்ளை குகன் - யாழ்), அன்ரனி (துரைச்சாமி அகிலன்-யாழ்), சிவசங்கர் (ராஜேந்திரகுமார் -யாழ்). டெனின் (வேரிஞான ரூபன் - வன்னி), பீற்றர் (சத்தியநாதன் சிறிகாந்தராசா - யாழ்). கோணேஸ் (சின்னத்தம்பி அன்னலிங்கம் - யாழ்), பப்பா (இராசலிங்கம் பத்மலிங்கம் - யாழ்), சூரியகுமார் (ஜெகராசா இலங்கேஸ்வரன்-யாழ்), ஜோ (பவான் தவநாயகி - யாழ்), அசோக் (மோ...

### மொறட்டுவ...

ஸார் தெரிவித்தனர்.

சில வாரங்களுக்கு முன்னர் பாணந்துறை மகன் வங்கி கொள்ளையிடப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

### மன்னார் ஆயர்...

இது தொடர்பான மகஜர்கள் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பருக்கும், இலங்கையில் உள்ள பாப்பரசரின் வதிவிடத் தூதுவருக்கும் இலங்கை ஆயர் மன்றத்துக்கும், பிறமதத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அனுப்பப்பட்ட மகஜரில், "நிராயுதபாணியான ஒருவர் தாக்கப்பட்டுள்ளது அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்" என கண்டிக்கப்பட்டுள்ளது.

(அந்தோனிப்பிள்ளை மரிய...

### மும்முனைத்...

பகுதிகளிலிருந்து வந்த தாக்குதல்களின் ஊடாக சிலாவத்துறை இராணுவ முகாம் மீது மற்றொருமுனையிலிருந்து தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத் தாக்குதல்களின் போது கரும்புலி மேஜர் டாம்போ முகாம் தகர்ப்பு முயற்சிக்கான கரும்புலித்தாக்குதலில் வீரமரணமடைந்தார். 20ஆம் திகதிசிலாவத்துறைஇராணுவ முகாமைக் கைப்பற்ற எடுத்த முயற்சியில் விடுதலைப் புலிகள் தரப்பில் 20 பேர் வீரமரணமடைந்தனர்.

21-ந் திகதி கடலிலிருந்து தாக்குதலைத் தொடுத்த வண்ணம் கரையிறங்க முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 10 பேர் வீரமரணமடைந்தனர்.

22-ந் திகதி சிலாவத்துறையில் நடந்த மற்றொரு மோத...

### சுதந்திரக்கட்சி —

இபதி பிரேமதாஸவை புகழ்ந்துபேசிய சம்பவம் காலியில் இடம் பெற்றது

திருமதி பண்டாரநாயக்காவின் குடும்பமே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் ஆதிக்கம் செலுத்துகிறது. ஏனையவர்களுக்கு இடமில்லை எனவும் அவர் சொன்னார்.

### குடா நாட்டில்...

அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்குத் தேவையான டீசலை வவுனியாவில் இருந்து கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரியவருகிறது. 66

### மன்னார்...

நேற்றைய மோதல்களில் ஆறுபடையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் உள்ள கரையோர இராணுவ முகாம்களுக்கு புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதால் மன்னார் மாவட்டத்தை வவுனியாவுடன்...

### மண்ணெண்ணெய்...

சங்க எல்லைப் பரப்பிற்குள் உள்ள மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு 3/4 லீற்றர் என்ற வீதம் லீற்றர் 36 ரூபாவாக விற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஒரு...

எதிர் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்கும் எண்ணம் ஏதாவது உண்டா? எனக் கேட்கப்பட்ட போது, "ஒரு குடும்பத்தில் இருவர் ஒரேமாதிரி பணியாவதை நான் விரும்பவில்லை" என்று பதிலளித்தார் ரோஹான்.

வடணிக சுந்தரிகுகதாசன் - யாழ்), 2-ம் லெப். ரஞ்சித் தாததா (கதிர்காமு குணபால சிங்கம் - யாழ்), 2-ம் லெப். திலாரவி (கவிதி அன்டன் ஜெயசீலன் - மன்னார்), 2-ம் லெப். பகிதி (பிரான்சிஸ் யேசுதாசன் மோசை - மன்னார்), 2-ம் லெப். நாதன் (ச. சுதாராஜ் - மன்னார்), 2-ம் லெப். சுமன் (முத்துராசா சோதீஸ்வரன் - மன்னார்), 2-ம் லெப். சுதா (மேரிகியூரச தேவராஜா - யாழ்), சுதர் (செபமாலை மரியதயேந்திரன் - யாழ்), சோமன் (விநாயக மூர்த்தி இராஜேந்திரன் - யாழ்), தர்ஷினி (புலவர் இலங்கேஸ்வரன்-யாழ்), ஜோ (பவான் தவநாயகி - யாழ்), அசோக் (மோகனதாசன் - யாழ்), சயந்தன் (செல்வ ராசா யோகேஸ்வரன்-யாழ்), பக்தியான் (சி. புரோம் திலகர்-மன்னார்), இளங்கோ (தா. கஸ்பார் - மன்னார்), கனகன் (அ. ரஞ்சித்குமார் - மன்னார்), ஜின்னா (கா. கோபாலப்பிள்ளை-மன்னார்) பூபால் (நா வடிவேல் - மன்னார்), பரமசிவன் (கிருஷ்ண கோபால் வசந்தகுமார் - மன்னார்), பாணன் (பால சிங்கம் குணபாலன்-மன்னார்) சந்திரகாந் (கா. ராஜு - மன்னார்), ரெத்தினம் (அந்தோனிப்பிள்ளை மரிய நாயகம்-மன்னார்), ஜெரோமி (நடராஜா சகாயராஜா - மன்னார்), இவாகரன் (தா. யோசப் சார்ள்ஸ்-), மரியநாயகம் (த. சின்னத்துரை - ), குட்டி (நல்லையா நவரத்தினம் - ), உசான் (சந்தானம் தேவநாயகம் - ), மது (இராமாநுவேல் கரேஷ்), ஜெயலால் (இரத்தினகுலசிங்கம் நிமயன்-), மதனன் (முருகேச சுமகாசன்), காந்தராஜா (நாகராஜா ஜெயகுமார்) நவீனன் (வீரசிங்கம் சபேசன்), சிறி (தங்கரட்ணம் நந்தகுமார்), சாயு (குமரசாமி சிவநாதன்), கலாதரன் (விநாயகமூர்த்தி சிவனேசன்), உதிதமன் (பழனியாண்டி வேலு), விஷ்ணு (கனகரத்தினம் நித்தியானந்தன்), மணிமுடி (பாலசிங்கம் கிரிதரன்), பீற்றர் (தெய்வேந்திரம் தவராஜா), கலைச்செல்வன் (குலசிங்கம் மணிவண்ணன்), பாலசுந்தரம் (மன்னார்), சேகரன் (மன்னார்), ராப் (மன்னார்), சசிகுமார் (வன்னி), சூரி (வன்னி), சங்கர் (வன்னி), ஜெயசக்தி (வன்னி), நவினி (வன்னி), வாணி (வன்னி), சாமேரி (வன்னி), அனிதா (வன்னி), சத்தியமலர் (வன்னி).


## தவறிவிட்டது

சிவரத்தினம் கணேசமூர்த்தி, வேலணை மேற்கு எனும் பெயர் விலாசமுள்ளதும் 570353136V எனும் இலக்கமுள்ளதுமான அடையாள அட்டையொன்று ரூபா 25,500/- ரொக்கப்பணத்துடன் கடந்த 24-3-91 ஞாயிறு அன்று பூநகரி, வாடியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து மனிதாபிமானமுறையில் மேற்படி விலாசத்தில் கிடைக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 03127



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கந்தர்மடம் டச்சு வீதி, லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 28 - 03 -1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


22-ந் திகதி சிலாவத்துறையில் நடந்த மற்றொரு மோதலில் மேலும் 14 பேர் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரமரணமடைந்துள்ளனர்.

தமிழீழ வரலாற்றில் முதல் முறையாக வான்படை கடற்படை என்பனவற்றுடன் மூன்று பெரிய படை முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்காப்படையினருடன் மோதிய வண்ணம் சிலாவத்துறை முகாம் மீது தாக்குதலை நடாத்தி சிறிலங்காப்படையினருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்திய சம்பவம் இதுவாகும்.

### 27 ஆம்...

விண்ணப்பதாரிகளில் தகுதியானவர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்படும்.

இருப்பதால் மன்னார் மாவட்டத்தை வவுனியாவுடன் இணைப்பதற்காகவே தற்போதைய நடவடிக்கை என பி. பி. ஸி குறிப்பிட்டது.

### கொக்குப் படையான்—

இம்முகாமில் இருந்து விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம்:

★ ஆர். பி ஜி -4
★ ஆர் பி டி எம். எம். ஜி-4
★ 60 மி மி மோட்டார் -3
★ ஜி. பி எம் ஜி- 1
★ ரி- 81 -2
★ ரி- 56 - 1
★ ஏ. கே- 47 - 2
★ ஆர். பி ஜி ஷெல்- 15
★ 60 மி. மி மோட்டார் ஷெல் - 15
★ ஏ. கே. ரவைகள் - 5000
★ நேட்டோ ரவை -1000

என்று பதிலளித்தார் ரோகான்.

### வடபகுதி...

அதிகரிக்கப்பட்டுள்ளதனை கொழும்புச் செய்தித்தாள்கள் சுட்டிக்காட்டியுள்ளதையடுத்து இப் பொருள்களைக் கூடுதலான அளவில் அனுப்பி வைக்கவே இந் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 66

### புலிகளுக்கு...

பகுதியில் இயங்கும் பிறிதொரு குழுவும் புலிகளின் மறைவிடங்களைக் காட்டிக் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அடிக்கடி...

குற்றம்சாட்டினார். கட்சி இவரை வெளியேற்றியது.

அந்த நேரம் சுப்பிரமணிய சுவாமி பாரதிய ஜனதா கட்சியையும் பகைத்திருந்தார். காங்கிரஸ் கட்சியையும் பலமாக விமர்சித்துப் பகைத்துக் கொண்டார். எந்தக் கட்சியில் சேரலாம் என எண்ணினார். சரண்சிங் ஞாபகம் வந்தது அவருடைய லோக்தள் கட்சியில் சேர்ந்தார்.

இப்படிப் பலரையும் பகைத்து வேண்டிய போது நட்பும் பூண்டு, பதவியும் அதிகாரமும் பெற்றுள்ளார். தலைமைப் பீடத்திற்கு இவரால் தலையிடி இருக்கும். அதைப் பொறுத்தே ஆகவேண்டும். இல்லாவிடில் தலைமைப் பீடத்தையே கவிழ்த்துவிடுவார்.

இப்போது மீண்டும் இவர் காட்டில் மழை. சந்திரசேகர் இராஜினாமாச் செய்து விட்டார். அடுத்ததாக எந்தக்கட்சி ஆட்சியைப் பிடிக்கும். எதை ஆட்சி பீடம் ஏற்றலாம் என்பது பற்றிய சிந்தனையில் மூழ்கியிருக்கிறார்.

எந்தக் கட்சிக்குத் தாவுகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

தொகுப்பு: வி. பி.